**பள்ளிக் கல்வி இயக்ககம்**

**அனுப்புநர்,**

திருமதி.க.சசிகலா,
இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்),
பள்ளிக் கல்வி இயக்ககம்,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரி சாலை, சென்னை-6

**பெறுநர்,**

முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்
(மின் அஞ்சல் மூலமாக)

ந.க.எண். 019215/ஐ/இ1/2025-1, நாள்.29.07.2025

**பொருள்:** பள்ளிக் கல்வி – டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளான 05.09.2025 அன்று ஆசிரியர் தின விழா கொண்டாடுதல் - நல்லாசிரியர் விருதுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் தங்கள் விவரங்களை EMIS இணைய தளம் மூலம் பதிவேற்றம் செய்ய தெரிவித்தது – விண்ணப்பங்களை திருத்துவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளதைத் (Edit option enabled) தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை:**
1. அரசாணை (1டி) எண்.220 பள்ளிக் கல்வி (பொது-II) துறை, நாள் 05.08.2022.
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், செ-06 ந.க.எண்.019215/ஐ/இ1/2025 நாள்.17.07.2025.

ஃஃஃ

பார்வை 2ல் காணும் செயல்முறைகளின் படி 2025 ஆம் ஆண்டிற்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுக்கு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள **தொடக்க/நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலை/ தனியார் பள்ளிகள்/ ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்/ சமூக பாதுகாப்புத்துறை / ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில்** மாநில நல்லாசிரியர் விருதுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் தங்களின் விவரங்களை EMIS இணைய தளம் மூலம் 20.07.2025 முதல் 03.08.2025-க்குள் பதிவேற்றம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஆசிரியர்கள் இணையவழியில் விண்ணப்பத்தில் எதேனும் தவறுதலாக உள்ளீடு செய்து சமர்ப்பித்து விட்டால் அதனை சரி செய்யும் வகையில் திருத்தம் மேற்கொள்ளும் வாய்ப்பு 29.07.2025 முதல் இணையவழி விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ளது. எனவே இதனை பயன்படுத்தி ஆசிரியர்கள் தங்களது விண்ணப்பத்தினை சரியாக உள்ளீடு செய்வதை உறுதி செய்து மேற்குறிப்பிட்டுள்ள நாளுக்குள் (03.08.2025) முழுமையாக பதிவேற்றம் செய்ய தெரிவிக்குமாறும்,

மேலும் 03.08.2025 க்குப் பின்னர் இணையவழி விண்ணப்பங்கள் மாவட்டத் தேர்வுக்குழுவின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதால் அதன் பின்னர் விண்ணப்பத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள முடியாது என்ற விவரத்தினை தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து தொடக்க/நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலை/ தனியார் பள்ளிகள்/ ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்/ ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கையாக அனுப்பி தெரிவிக்குமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இணையவழி விண்ணப்பப் பதிவேற்றம், தகவல்களை உள்ளீடு செய்தல் தொடர்பான சந்தேகங்களை dseemis2025@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்து கொள்ளுமாறு அனைத்து விண்ணப்பதாரர்களுக்கு தெரியப்படுத்துமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

29/7/25

இணை இயக்குநர்

29/7/25

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, தலைமைச் செயலகம், செ – 06. (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது).
2. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், செ-06.
3. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், செ – 06.
4. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், செ – 06.